AIRPORT TRANSFER
Heathow Gatwick
City Airport
Luton Stansted
CALL US NOW FOR BETTER OFFER AND SERVICE
CALL US NOW ON
079 0843 7921

# பார்வை

INSEIN newsletter-அறிவியல் வழிகாட்டி

FREE ISSUE மாதம் இரு வெளியீடு Published twice a month Issue 06/2013 Friday, March 15th, 2013

Jaffna's Fast Food & Cool Bar
TEL : 020 3514 6281
மனச்சுவைக்கு மங்காத உணவகம். தரமான சுவையான உடன் உணவுகள் உங்கள் தேவைக்கேற்ப தயாரித்து வழங்கப்படும் . .
Hayes Minimart,
Unit 1, 610 Uxbridge Road,
Hayes, Middlesex, UB4 0RY


Parvai, Insein Newsletter, 610, Uxbridge Road, Hayes, Middlesex, UB4 0RY
Tel : (020) 8561 6324 Mob : 078 0843 7921 Fax: (020) 8561 6324 Website: www.insein.co.uk Email: info@insein.co.uk

**மகாத்மா காந்தி – ஆசிரியர் P.S.R**



1920ஆம் ஆண்டில் உப்புச் சத்தியாக்கிரகத்தை தனது அரசியல் நடவடிக்கையாக வெளிப்படுத்திய காந்தி சுவராஜ் கட்சிக்கும் இந்திய.... தொடரும் 2ம் பக்கம்

**பொருளாதாரமும் அரசியலும் – Dr. Ravee**



நாம் சென்ற இதழ்களில் பொருளாதாரத்தில் உற்பத்தி (Production), கேள்வி (Demand), நிரம்பல் (Supply), விலை (Price), நெகிழ்வுத்தன்மை... தொடரும் 3ம் பக்கம்

**இலங்கையில் இந்தியாவின் நேரடித் தலையீடு- Dr. மோகன்**



விளைவு 1987ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ஆம் திகதி கைதிகள் அனைவரும் கொழும்பிற்கு விமானம் மூலம் அழைத்துச் செல்லப்பட.... தொடரும் 4ம் பக்கம்

**வீட்டு வாடகை நிலுவை முற்றும் வீட்டை திருப்பி பெறல் - சட்டத்தரணி திரு. ஜெயராஜன்**



பிரிவு 8 வீட்டுச் சட்டம் 1988 ன் கீழ் இரண்டு வகையான அடிப்படைகளில் அதாவது.... தொடரும் 5ம் பக்கம்

**விடுதலையின் முதிர்ச்சி பெற்ற பாதை - தி.வன்னியன்**



தனது தேசிய அபிலாசைகளை அடைவதற்கு தன்னைத்தானே ஆளுகின்ற உரிமையைப் பெறுதல். இவ்வாறு சுயநிர்ணய உரிமையைப்.... தொடரும் 6ம் பக்கம்

**ஆன்மீகம் : ஆலயம் – சந்துரு ஐயா**



உலகில் காணப்படும் பொருள்களில் கல்லில் நெருப்பு அதிகமாகத் தங்கியிருப்பது கண்கூடு. ஒரு கல்லை மற்றொரு கல்லால் தட்டினால்.... தொடரும் 10ம் பக்கம்

## ஆசிரியர் கருத்தும் அன்பான வேண்டுகோளும்

மக்களின் உணர்வுகளையும்,உணர்ச்சிகளையும் உள்வாங்கும் இன்சயின் (Insein Newsletter - Parvai) செய்தித்தாள் அதற்கான பண்பும் சிறப்பும் உடையவர்களை வருக வருக என வரவேற்கிறது. இது அடிப்படையாக மொழி (தமிழ்) மண், மதம் என்பன பற்றிய அறிவுரைகளை ஆக்கங்கள் ஊடாக எம்பாமரமக்களுக்கு அறிவூட்டுவதுடன் சிறார்களுக்கு எமது வாழ்வியல் முறைகளையும் அதன் தத்துவங்களையும் தெளிவுபடுத்தும் நோக்குடன் இயங்கும் (Institute of Socio Economic Integration) அமைப்பான சமூகப் பொருளாதார ஒன்றிணைந்த நிறுவனத்தில் ஓர் இணைவாக பார்வை செயல்படுகின்றது. இதை வலுப்பெற அமைப்பதற்கு ஓர் நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்க இதன் அறங்காவற்சபை தீர்மானித்துள்ளது. அதற்கமைய பொதுமக்களாகிய நீங்கள் அங்கத்தவர்களாக இணைந்து இதன் வளர்ச்சிக்கு ஒத்துழைப்புக்களையும், ஆதரவுகளையும் வழங்க விரும்புபவர்கள் எம்மிடம் இணையத்தளம் மூலமாகவோ தபால் மூலமாகவோ தொடர்பு கொண்டு தமது கருத்துக்களையும் அதற்கான பயன்பாட்டு நிலையையும், அதை உருவாக்குவதற்கும் முன்வர வேண்டும் என ஆசிரியராகிய நான் விரும்புகின்றேன். இத்தேவைகள் இரு பகுதிகளாக கருதப்படுகின்றன.

1] ஆக்கம்,கருத்துக்கள். கட்டுரைகள், கவிதைகள்,இலக்கியங்கள், அனுபவங்கள் என்பவற்றிற்கூடாக மக்களின் தேவைக்கேற்ப இச்செய்தித்தாளை வடிவமைக்க உதவுதல்.

2] அங்கத்தவராகவும், பங்களிப்பாளராகவும், விளம்பரதாரர்களாகவும், நன்கொடையாளர்களாகவும் இதன் வளர்ச்சிக்காக செயல்பட விரும்புபவர்கள்.



உங்களையும் உங்கள் பரிமாணங்களையும் உள்வாங்க ஆவலுடன் எதிர்பார்க்கும் உங்கள் **ஆசிரியர் P.S.R**

எம்மவர்களில் பண்பு, அறிவு, ஆளுமை உடையவர்கள் சமுதாயத்தில் தலைவர்களாக மதிக்கப்படுவார்கள்.

தமிழ் ஓலைகள்
TAMIL PAGES
தமிழர்களுக்கோர்
தரமான இலவச
சமூக, வர்த்தக
தகவல் ஏடு
0771 800 3838 | 0798 642 9848
editor@tamilpages.com
www.tamilpages.com

QUICKSHELF
Suppliers of quality Refrigeration Equipment & Shop Fitters
- Refrigeration & Air-conditioning
- Shop Designing
- Shop Fitting & Supplies
- Catering Equipment
- Flooring & Plumbing
- Ceiling & Lighting
- EPoS & CCTV Solutions

Call Dharshan on 078 0332 0400 to get your FREE QUOTE TODAY
-www.quickshelf.co.uk-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாத்மா காந்தி

1920ஆம் ஆண்டில் உப்புச் சத்தியாக்கிரகத்தை தனது அரசியல் நடவடிக்கையாக வெளிப்படுத்திய காந்தி சுவராஜ் கட்சிக்கும் இந்திய தேசியக் காங்கிரசுக்கும் ஏற்பட்ட விரிசலை தடுக்கும் முகமாக செயல்பட்டார். அதன் ஊடாக மது, வறுமை ஒழிப்பு, தீண்டாமை என்பவற்றிற்கு எதிராக தனது அரசியல் நடவடிக்கையை விரிவாக்கினார். 1927 இல் சேர் ஜோன் சிமொன் (Sir John Simon) என்ற பிரித்தானிய அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட புதிய யாப்புத்திருத்தத்தின் ஆணையாளர் ஆனார். ஆந்த ஆணையாளர் அமைப்பில் எந்த ஒரு இந்திய குடிமகனையும் அங்கத்தவராக்கவில்லை. அதன் பயனாக அந்த ஆணையாளருக்கு எதிராக இந்தியாவின் அரசியல் கட்சிகள் அதைப் பகிஷ்கரித்தார்கள். அதை எதிர்த்துப் போராடிய காந்தி 1928 மார்கழியில் கல்கத்தா காங்கிரஸ் ஊடாக பெரிய இந்திய அரசாட்சி நிலை அல்லது அவர்களுடன் ஒத்துழைக்காத இந்திய நாட்டின் சுதந்திரத்தை தீர்மானமாகக் கொண்டு வந்தார்.


காந்தி மட்டும் அல்லாது சுபாஷ்சந்திரபோஸ் (Subhas Chandrabose) ஜவர்லால்நேரு (Jawaharlah Nehur) உடனடி விடுதலைக்காக இணைந்து கோரிக்கை வைத்தார்கள். அதை மறுத்த பிரித்தானியா மார்கழி 31ஆம் திகதி 1929ஆம் ஆண்டு இந்தியக்கொடி லாகூரில் (Lahore) பறக்கவிடப்பட்டது. இந்திய தேசியக் காங்கிரசின் லாகூரில் நடந்த கூட்டத்தில் 26 தை 1930 இல் இந்திய சுதந்திர தினமாக கொண்டாடப்பட்டது. அதைத் தொடர்ந்து உப்பு வரிக்கெதிராக பங்குனி 1930 இல் புதிய சத்தியாக்கிரகத்தை காந்தி அறிமுகப்படுத்தினார். இச்சத்தியாக்கிரகம் உப்பு நடைப்பயணம் (Salt March) என பிரபல்யமாக இந்தியா மத்தியில் வெளிக்காட்டப்பட்டது. இவர்கள் தமது நடைப்பயணத்தின் 241 மைல்களை அமெதபாத் (Ahmedabad) இல் இருந்து டண்டி (Dandi) வரை பல்லாயிரக்கணக்கான இந்திய மக்களுடன் கடல் கரையை நோக்கிச் சென்றார்கள். இந்தப் போராட்டம் பிரித்தானியாவிற்கு தலையிடியைக் கொடுத்ததுடன் அதிகப்படியான வெற்றிகரமானதாக அமைந்தது. இதில் 60,000 பேர் கைது செய்யப்பட்டார்கள். வீட்டுப் பாவனைக்குரிய அத்தியாவசியமானது உப்பு என்கிறதால் பெண்கள் விசேட அக்கறை காட்டினார்கள். அப்பெண்கள் ஊடாக இந்து விதவைகளின் மேலதிக எதிர்ப்பையும், தீண்டாமையையும், சிறுவர் திருமணத்தையும், பெண்கள் முகமூடிக்கு எதிராகவும் (Purdah) போராட்டத்தை முன்னெடுத்து அவற்றை எதிர்த்தார்.


பார்ப்பண்ட (Porbandar) என்னும் கடற்கரை அண்டிய நகரத்தில் 1869ஆம ஆண்டு ஐப்பசி மாதம் 2ஆம் திகதி கரம்ஷாட் (Karamchand) காந்திக்கும், புத்தலிபாய் (Putlibai) க்கும் மகனாகப் பிறந்தார். இவருடைய தந்தையார் இந்து மொட் (Modh) சமுதாயத்தைச் சேர்ந்தவரும் தாயார் பரணாமி வைஷ்ணவ (Pranami Vaishnava) சமூகத்தைச் சேர்ந்தவர்கள். கரம்சாண்டின் முதல் 3 மனைவிகளும் குழந்தைப்பிரசவத்தின் போது இறந்தபடியால் நான்காவது மனைவியாக புத்தலிபாயை திருமணம் செய்தார். காந்தி தனது இளவயதில் சரவணாவின் கதைகளையும் அரசர் கரிச்சந்திராவின் கதைகளையும் பெரியளவில் உள்வாங்கினார். காந்தி இளவயதில் அன்புக்கும், நேர்மைக்கும் அதிக மதிப்புக் கொடுத்தவராகக் காணப்பட்டார். இவர் வைகாசி 1883 இல் தனது 13வது வயதில் 14 வயதுடைய கஸ்தூர்பாயை திருமணம் செய்தார். இத்திருமணம் சிறுவர் திருமணமாக மத சம்பிரதாயத்திற்கேற்ப நடைபெற்றது. அதனால் தனது பாடசாலையில் இறுதி ஆண்டைத் தொலைத்தார். அதன் பயனாக சிறுவர் திருமணத்தை அவர் எதிர்த்தார். இவர் தனது 15வது வயதில் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்து அக்குழந்தை சிலநாட்களே உயிர் வாழ்ந்தது. அதே காலத்தில் இவருடைய தந்தையாரும் இறந்து விட்டார். தொடர்ந்து மோகன்டாஸ் (Mohandas) எனும் காந்திக்கும் கஸ்தூர்பாவுக்கும் 4 பிள்ளைகள் பிறந்தார்கள். அவருடைய ஆங்கில அறிவாற்றல் அதிதிறமையானதாகவும் எண்கணிதம் சாதாரணமாகவும் புவியியல் பலவீனமாகவும் அவருக்கான சான்றிதழ் வெளிப்படுத்தியது. அத்துடன் நன்நடத்தையும், அழகற்ற எழுத்துடையவராகவும் வெளிப்படுத்தியது. அவர் குஜராத்தில் சமல்தாஸ் (Samaldas) கல்லூரியில் பல்கலைக்கழக அனுமதிப்பரீட்சை (Metriculatioon Exam)யில் சித்தி பெற்றார். காந்தி அவருடைய குடும்பவிருப்பப்படி தகப்பன் மறைவுக்குப் பின்பு 1888ஆம் ஆண்டு இலண்டன் சென்று சட்டப்பல்கலைக்கழகக் கல்லூரியில் இந்தியச் சட்டத்தையும், சட்டவியலையும் படித்து வழக்கு உரைஞர் (Barrister) ஆனார். இவர் இலண்டனில் இருந்த காலத்தில் மதுவையும், இறைச்சியையும் தவிர்த்து வாழ்ந்த ஜெயின் மொங் (Jain Monk) கின் வழிப்படி நடந்தார். அவர் ஆங்கில வழமைக்கு ஏற்ப நடனங்களையும் கற்றுக் கொண்டார். இடைக் காலத்தில் காந்தி புத்த இலக்கியங்கள் பற்றியும், இந்து இலக்கியங்கள் பற்றியும் தன்னை அர்ப்பணித்துக் கற்றுக் கொண்டார். அத்துடன் பகவத்கீதையைப் படித்தமையினால் மத எண்ணங்களில் ஆர்வம் கொண்டார். அவர் 1891 ஆனியில் தாயார் இறந்த காரணத்தால் இலண்டனிலிருந்து இந்தியா திரும்பினார். அவர் பம்பாயில் சட்டப்பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வாதாடு மன்றத்தில் கதைப்பதற்கு வெட்கப்படுவதினால் அது தோல்வி கண்டது. 1893ஆம் ஆண்டு பிரித்தானிய சாம்ராச்சியத்திற்குட்பட்ட தென்ஆபிரிக்காவில் டாடா அப்துல்லா என்னும் நிறுவனத்தில் வேலைக்குச் சென்றார்.

அவர் தனது 24வது வயதில் தென்ஆபிரிக்கா சென்று 21 ஆண்டுகள் வாழ்ந்தார். அங்கே அவருடைய அரசியல் நோக்கங்கள் நீதிநெறிகள் பற்றியும் அரசியல் தலைமைத்துவம் பற்றியும் தன்னை வளப்படுத்திக் கொண்டார். காந்தி ஒரு இந்து கூலி ஒப்பந்த அடிப்படையில் சட்டத்தரணியாக (Lawyer) கடமையாற்றினார். அவர் ஆபிரிக்காவில் கற்றுக் கொண்ட மத, சாதி எதிர்ப்புக் கொள்கைகளை இந்தியா திரும்பியதும் நடைமுறைப்படுத்த விரும்பினார். அவர் ஆபிரிக்காவில் நீடிக்கப்பட்ட காலத்தில் இருந்த பொழுது இந்தியர்களுக்கு வாக்குரிமை மறுக்கப்பட்டமையினால் பிரித்தானிய சாம்ராச்சியத்தை எதிர்த்தார். அவர் ஆபிரிக்காவில் நற்றல் (Natal) இந்திய காங்கிரஸ் (1894) என்னும் அமைப்புக்கூடாக அரசியலின் ஒன்றுபட்ட சக்தியாக உருவாக்கினார்.

மிகுதி அடுத்த இதழில் தொடரும்...

ஆக்கம் : ஆசிரியர் P.S.R





HOLIDAY TRIPS IN UK & EUROPE
SPECIALLY WALES TEMPLE & LOUDS TEMPLE
AND OTHER VARIOUS
HOLIDAY PLACES
FOR FURTHER DETAILS CONTACT
BALAN : 075 0777 9687
RAVEE : 079 0843 7921
HAYES MINI MART,
610, UXBRIDGE ROAD,
HAYES, UB4 0RY



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளாதாரமும் அரசியலும்

பங்குனி 4, 2013 இதழின் தொடர்ச்சி . . .

நாம் சென்ற இதழ்களில் பொருளாதாரத்தில் உற்பத்தி (Production), கேள்வி (Demand), நிரம்பல் (Supply), விலை (Price), நெகிழ்வுத்தன்மை (Elasticity) என்பன்வற்றைத் தெரிந்துகொண்டோம். இதை தொடர்ந்து நாங்கள் மாக்ரோ எக்னோமிக்ஸ் (Macroeconomics)இல் பொருளாதாரத்தின் வளர்ச்சி (Growth) பற்றியும் வியாபார வட்டத்தில் (Business Cycle) பொருளாதாரத்தின் பங்களிப்பு, வேலையின்மை (Unemployment), நாணயக்கொள்கை (Monetarypolicy), பொது வரிக்கொள்கை (Fiscal Policy) என்பன பற்றி ஒரளவு தெளிவாக தெரிந்து கொள்வோம். பொருளாதார வளர்ச்சி என்பது நிண்டகாலத்தில் (உ_+ம் 10 வருடங்கள்) ஒரு நாட்டில் மூலதனத்திற்கு ஏற்ப உற்பத்தி வெளியிடுகள் அதிகரிப்பதை உணர்த்தும். இதில் பங்குகொள்ளும் அதே காரணிகள் வேறு நாடுகளில் பயன்படுத்தும் பொழுது உற்பத்தியின் வளர்ச்சி வீதங்களில் மாற்றம் ஏற்படும். குறிப்பாக சில நாடுகளில் இவ்வளர்ச்சி ஏனைய நாடுகளை விட அதிகமான வளர்ச்சியை (Converge) நாங்கள் பார்க்கலாம்.

இவ்வளர்ச்சிகளுக்கு உற்படுத்தப்படும் காரணிகளில் முதலிட்டு வீகிதசாரம் (Rate of Investment) தொழில் நுட்ப மாற்றங்கள் (Technological Change) சனத்தொகை வளர்ச்சி (Population Growth) என்பன உற்பத்தி தேற்றத்திக்கு் (Production Theory) ஏற்ப அனுபவரீதியில் (Empirical) பாரம்பரிய் தன்மையில் (Neoclassical) வளர்ச்சி வடிவமைப்புக்கு அமையவும் (Growth Models) வளர்ச்சியின் கணக்கு (Growth Accounting) அமையவும் செயல்படுத்துவார்கள். வியாபார வட்டம் என்பது மாக்ரோஎக்கோணமிக்ஸ் (Macroeconomics)இல் பொருளாதார தாக்கங்களையும் அதற்கான அதிகரிப்புத்தன்மையையும் வேறுபட்ட ஒழுங்குமைப்பு வடிவில் பார்க்க வேண்டும். யோன் மைநாட் கேயீன்ஸ் (John Maynard Keynes) எனும் பொருளாதார ஆசிரியர் பொதுவான வேலைத்தேற்றத்திற்கு (The General Theory of Employment) அதாவது ஒரு பொருளுக்கு சாராசரி கேள்வியை (Aggregate Demand) அதிகளவு வேலையில்லாதோர் வாழும் நாட்டில் உற்பத்தி திறன் திர்மானிக்கும். இவைகள் சராசரி கேள்வி (Aggregate Demand), சராசரி நிரம்பல் (Aggregate Supply) வருமான ஏற்றத்தாழ்வு (Income Flow), வேலையின்மை (Unemployment), பெரிய அளவிலான பொருளாதார அமுக்கம் (Great Depression) என்பன வியாபர வட்டத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கு அடிப்படையாக அமையும் என கேயின்சனின் பொருளாதாரத்தில் (Keynesian Economics) குறிப்பிட்டுள்ளது.

நாணயக் கொள்கையில் (Monetary Policy) பணவிக்கம் (Inflation) என்பது உள்ளடக்கப்படும். பணம் என்பது பொருளாதார விதியாக ஒரு பொருளுக்கு அல்லது சேவைக்கு கொடுக்கபடும் விலையின் பெறுமதி ஆகும். பணம் என்பது பொதுவாகவே எல்லோராலும் ஏற்றுக் கொள்ளகூடியதாகவும் நிண்ட கால பாவனையுள்ளதாகவும்இ இலகுவில் எடுத்து செல்ல கூடியதாகவும் பொது மக்களுக்கு நம்பிக்கை ஊட்டக்கூடியதாகவும் அடிக்கடி மாறுபடாத பெறுமதி கொண்டதாகவும் இருக்க வேண்டும். இப்பணம் என்ப்து சமூகத்தில் பாவனைக்கு வழக்கமாக (Convention) உபயோகத்தில் உள்ளது என கருதப்படுகிறது. பணம் வர்த்தகரீதியாக பணமாற்று பரிவர்தணமாக இயங்கின்றது. இதில் முக்கிய பங்கு பெறுமதியை கணக்கிடும் அலகாக காணப்படும். இப்பணம் பாவனையில் இருந்தாலும் சில சமயங்களில் (Barter) எனும் பண்டாமாற்று சேவை அதாவது ஒருவருக்கு இரு வகையான தேவைகள் ஏற்படும் போது பணத்தை பாவிக்கமால் பொருளதார நடவடிக்கையில் செயல்படுகின்றன. இவ்வாறான தன்மையை பண்டமாற்று என்பவார்கள்.

ஆக்கம் : Dr. Ravee

அடுத்த இதழில் தொடரும்

INSEIN
INSTITUTE OF SOCIO ECONOMIC INTEGRATION
INSEIN NEWS LETTER, INSEIN RELAX FUND
(பார்வை, Gift Aid) இணைந்து
பெருமையுடன் வழங்கும்

தாயக உறவுகளுக்கான
இன்னிசை மாலை 2013
மாபெரும் இசை நிகழ்வும்
நடன விருந்தும்



ஷீமதி சிவராஜி சிவகுமார் அவர்களுடைய
நெறியாழ்கையில் "சிவநர்த்தனாலயா"
மாணவிகள் வழங்கும் பரத நாட்டிய நிகழ்வும்



இந்நிகழ்ச்சியில் சிறப்பாக திரு மயூரன்
விவேகானந்தன் மற்றும் குழுவினர் வழங்கும்
இனிய இசை நிகழ்வும்,

CALL US



இந் நிகழ்ச்சிகள் அனைத்தையும்
சுவைபட தொகுத்து வழங்குகிறார்
ஷீமதி சுபாஷனி சர்மா.

Venue
Winston Churchill Hall
Ruislip, Middlesex. HA4 7QL
Date & Time
07/04/2013 from 05.30pm to 10.30pm

0790 8437 921

Tickets : VIP £25 - Single £10
அனைவரும் வருக! ஆனந்தமாய் மகிழ்க!
இந்நிகழ்ச்சி மூலம் சேகரிக்கப்படும் நிதி வவுனியா "பெரியார் இல்லம்" வளர்ச்சிக்கு பயன்படுத்தப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் இந்தியாவின் நேரடித் தலையீடு

## இந்தியாவின் இராஜதந்திர வெற்றி

பங்குனி 4, 2013 இதழின் தொடர்ச்சி . . .

விளைவு 1987ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 5ஆம் திகதி கைதிகள் அனைவரும் கொழும்பிற்கு விமானம் மூலம் அழைத்துச் செல்லப்பட பலாலி விமான நிலையத்தில் காத்திருந்த வேளையில் 17 கைதிகளும் சைனைட் உட்கொண்டு தற்கொலை செய்ய முயற்சித்தனர். இவர்களைக் காப்பாற்ற ஐ.பி.கே.எவ இன் மருத்துவப் பிரிவு முயற்சித்தாலும் இறுதியில் முன்னணித் தலைவர்கள் 15பேர் இறந்து போயிருந்தனர். இந்நிகழ்வு இந்திய இராணுவத்திற்கு எதிரான தாக்குதல்களை த.வி.பு ஆரம்பிக்கக் காரணமாகியது.

1987ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 6ஆம் திகதி இந்திய இராணுவத் தளபதி த.வி.பு களுக்கு எதிரான யுத்தத்தினை நடாத்துவது தொடர்பாக இலங்கையிலுள்ள ஐ.பி.கே.எவ் படைத் தளபதிகளுடன் கலந்துரையாடியிருந்தார். அப்போது த.வி.பு உடன் யுத்தத்தினை ஐ.பி.கே.எவ் ஆரம்பித்தால் அடுத்து வருகின்ற இருபது வருடங்களுக்கு இலங்கையிலிருந்து ஐ.பி.கே.எவ் வாபஸ் பெறப்படமுடியாத நிலை ஏற்படும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டது. ஆயினும் இக் கருத்து முதன்மை பெறவில்லை. யுத்தத்தினைத் தவிர்ப்பதற்காக ஐபிகேஎவ் இற்கு இலங்கையில் தலைமை தாங்கிய இராணுவத் தளபதி திபேந்திரசிங் த.வி.பு களுடன் நடாத்திய இறுதிப் பேச்சுவார்த்தையும் தோல்வியடைந்த நிலையில் 1987ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 9ஆம், 10ஆம் திகதிகளில் த.வி.பு களின் வானொலி, தொலைக்காட்சி நிலையங்கள் அழிக்கப்பட்டதுடன் அவர்களின் நாளாந்த பத்திரிகை அலுவலகங்களும் அழிக்கப்பட்டன. இது த.வி.பு களுக்கும் ஐபிகேஎவ் இற்கும் இடையிலான நீண்ட யுத்தத்தினை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஆரம்பித்து வைக்க காரணமாகியது.

இந்திய அமைதிகாக்கும் படை விடுதலைப் புலிகளுக்கு எதிராக யுத்தம் செய்ய நிர்பந்திக்கப்பட்டாலும் விடுதலைப் புலிகளின் ஆட்பலம், ஆயுதபலம், இராணுவ நகர்வுகள் தொடர்பாக இந்திய புலனாய்வுத்துறையாகிய றோ (Re search Analyzing Wing Raw) தவறான தகவல்களையே பெற்றிருந்தது. இதனால் பாக்கிஸ்தான் யுத்தத்தில் இந்திய இராணுவம் பெற்ற இழப்புக்களை விட அதிகளவில் இழப்புக்களைச் சந்திக்க வேண்டியிருந்ததுடன் பெருமளவு அதிகாரிகளையும் இழக்க வேண்டியிருந்தது. மரபுப் போர் முறைப் பயிற்சியைப் பெற்றிருந்த இந்திய இராணுவத்திற்கு கெரில்லா யுத்தம் புதிய அனுபவமாக இருந்தது. கெரில்லாக்களுடன் யுத்தம் புரிந்த அனுபவம் இந்தியாவிற்கு இல்லாததால் பெரும் இழப்புக்களை யாழ் நகரத்திற்குள் சந்திக்க வேண்டியிருந்தது. ஆயினும் இந்திய இராணுவம் முழுமையாக யாழ் குடாநாட்டைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்ததுடன் விடுதலைப்புலிகள் தமது இராணுவ செயற்பாட்டுத் தளத்தினை வன்னிக்கு மாற்றிக் கொண்டார். வன்னிப் பிரதேசம் அடர்ந்த காட்டுப் பிரதேசம் என்பதோடு விடுதலைப் புலிகளுக்கு நன்கு பரீச்சயமான பிரதேசமாகவும் காணப்பட்டது. நகர்புறப் கெரில்லாக்களாக செயற்படும் திறமை கொண்ட புலிகளுக்கு காட்டுப் பிரதேசங்களில் கெரில்லாத் தாக்குதல்களை நடாத்தும் திறனும் காணப்பட்டிருந்தது. வன்னிக் காட்டிற்குள் இந்திய இராணுவம் புலிகளை அழிக்க நுழைந்தாலும் மரபுப்போர் பயிற்சி பெற்ற இந்தியப் படை- களுக்கு காடுகளுக்குள் பதுங்கியிருக்கும் கெரில்லாக்களுடன் யுத்தம் செய்வது கடினமானதாகவே இருந்தது. இதனால் பெரும் இழப்புக்களை காடுகளுக்குள் இந்திய இராணுவம் சந்திக்க வேண்டியிருந்தது.

## இந்தியாவின் இராஜதந்திர முயற்சியில் ஏற்பட்ட தோல்வி

இந்திய புலனாய்வுத் துறையாகிய றோ இலங்கையின் வெளியுறவுக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கில் திட்டமிட்டு உருவாக்கி உதவியளித்திருந்த தமிழ் இராணுவக் குழுக்களில் த.வி.பு மாத்திரம் றோவின் கட்டுப்பாட்டிலிருந்து விலகிச் சுதந்திரமாகச் செயற்பட்டது. தமிழ்



இராணுவக் குழுக்களைப் பயன்படுத்தி இலங்கை அரசாங்கத்தினைக் கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்ட றோவிற்கு இப்போது த.வி.பு கட்டுப்படுத்தி அல்லது அழித்து இந்திய நலனைப் பாதுகாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதன் விளைவே த.வி.பு களுக்கும் ஐபிகேஎவ் இற்கும் இடையிலான யுத்தமாகும். த.வி.பு இயக்கம் இலங்கையில் சமாதானத்தினை ஏற்படுத்துவதற்குத் தடையாக இருக்கின்றது என்ற கோசத்தினை முன்வைத்து இந்திய இராணுவத்தினை றோ யுத்தத்தில் ஈடுபட வைத்தது. 1155 இந்திய இராணுவ வீரர்கள் மரணிப்பதற்கும் நாள் ஒன்றிற்கு இந்திய மதிப்பில் 50 மில்லியன் ரூபாவினை யுத்தத்திற்குச் செலவிடுவதற்கும் இவ்யுத்தம் காரணமாகியது. இப்பெரும் மனித இழப்புக்களையும், பொருளாதார இழப்புக்களையும் இலங்கையின் அல்லது இலங்கைத் தமிழர்களின் நலனில் அக்கறை கொண்டு இந்தியா ஏற்றுக் கொண்டிருக்கவில்லை. இந்நிகழ்வானது இலங்கையின் கொள்கை வகுப்பாளர்கள் இந்திய சார்பு வெளியுறவுக் கொள்கையினை வகுக்க வைப்பதற்கும் அதன்மூலம் தெற்காசியாவின் வல்லரசாகத் தன்னைத்தானே பிரகடனப்படுத்திக் கொள்வதற்கும் இந்தியா கொடுத்த விலையாகும்.

எனவே இவ்யுத்தம் இலங்கையில் சமாதானத்தினை ஏற்படுத்துவதற்கான இந்தியாவின் செயற்பாட்டிற்கு வலுச்சேர்த்ததாகக் கூறப்பட்டாலும் அடிப்படையில் இந்தியா தனது பிராந்திய வல்லாதிக்கத்தினையும் பாதுகாப்பினையும் ஏனைய நலன்களையும் ஒப்பந்தத்தினூடாகப் பாதுகாக்க முற்பட்டதன் விளைவாகவே இது ஏற்பட்டது. எல்லாத் தமிழ் இராணுவக் குழுக்களும் ஆரம்பத்தில் இவ் ஒப்பந்தத்தினை ஏற்றுக்கொண்டன. ஆயினும் வல்லரசுகளின் தலையீட்டினால் தமிழீழ விடுதலைப் புலிகள் இவ் ஒப்பந்தத்தினை நிராகரித்திருந்தன. இலங்கைக்கான ஐக்கிய அமெரிக்கத் தூதுவராலய முதல் செயலாளரும், இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகரும் 1987ஆம் ஆண்டு ஆவணிமாதம் யாழ்ப்பாணம் சென்று தமிழீழ விடுதலைப் புலிகளைச் சந்தித்து இலங்கை இந்திய ஒப்பந்தத்தினை நிராகரிக்கும்படி கேட்டுக் கொண்டதுடன் தேவையான ஆயுதங்களையும் பிரித்தானிய முகவர்களூடாக விநியோகித்துமிருந்தனர்.

**ஆக்கம் : Dr. மோகன்**

அடுத்த இதழில் தொடரும்


## அனுதாபச்செய்தி





மருத்துவர்
இலக்கிய ஆர்வலர்
நாட்டுப்பற்றாளர்
செயற்பாட்டாளர்
போராளி

அமரர் Dr. நமசிவாயம் சத்தியமூர்த்தி அவர்களின் இழப்பிற்காக மனம் வருந்தும் INSEIN TEAM தமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டு வாடகை நிலுவை முற்றும் வீட்டை திருப்பி பெறல்

## வாடகை கட்டண நிலுவை - Section 8

பங்குனி 4, 2013 இதழின் தொடர்ச்சி . . .

பிரிவு 8 வீட்டுச் சட்டம் 1988 ன் கீழ் இரண்டு வகையான அடிப்படைகளில் அதாவது தண்மதி அடிப்படை (Discretionary Grounds) கட்டாய அடிப்படை (Mandatory Grounds) வழக்குத் தொடர முடியும். வடகைகாரர் சட்டபடி வாடகை ஒப்பந்தத்தில் ஒப்புகொன்டதண் அடிப்படையில் வாடகை கட்டணத்தை செலுத்த தவறியமை அல்லது வாடகைக்காரர் தொடர்ந்து தாமதமாக வாடகையை செலுத்தி வரும் காரணத்துக்காக வீட்டை திருப்பி கொடுப்பதற்கான கட்டளையை பெற நீதிமன்றத்தில் வழக்கு தொடரலாம். ஆயினும் நீதிமன்றம் அனைத்து காரணிகளையும் ஆராய்ந்து அது திருப்தி அடைந்தால் மட்டுமே வேண்டிக் கொண்டவாறு வாடகைக்காரரை வெளியேற உத்தரவிடும் (Discretionary Grounds, 10 & 11).

ஒரு வாடகைகாரர் இரண்டு மாதத்திற்கு அல்லது அதற்க்கு சமமான வாடகை நிலுவையில் உள்ள சந்தர்பங்களில் வீட்டு உரிமையாளர் கட்டாய அடிப்படையில் பிரிவு 8, அடிப்படை 8 (Ground 8 of Schedule 2 to the Housing Act 1988 as amended by the Housing Act 1996) வீட்டுச் சொந்தக்காரர் இரண்டு மாத வாடகை அல்லது அதற்கு சமமான வாடகை நிலுவையை நீதிமன்றந்துக்கு உறுதி செய்தால் நீதிமன்றம் பதின்னான்கு நாட்களுக்குள் வீட்டை விட்டு வெளியேறுமாறு வாடகைக்காரருக்கு உத்தரவிட வேண்டும். நீதிமன்றம் தனக்குள்ள சக்தியை பயன்படுத்தி வீட்டைவிட்டு வெளியேறச் நிர்பந்திக்கும் ஆணையையிட மறுக்க முடியாது.

## வாடகை ஒப்பந்த நிறைவு

### Section 21, Housing Act 1988 as amended by Housing Act 1996

வீட்டு உடைமையாளர் உரிய நடைமுறைகளை பின்பற்றியிருப்பதுடன் வீட்டு உடமையை திரும்பப் பெறுவதற்கான அடிப்படையை நிருபிக்குமிடத்து தனது வீட்டை திரும்பப் பெற முடியும். அதற்க்கான பொதுவான விதிமுறை என்னவெனில் பிரிவு 21 ன் கீழ் வீட்டை திருப்பி தருமாறு கூறும் சட்ட அறிவித்தலைக் (Section 21 Notice) கொடுக்க வேண்டும். அறிவித்தல் இரண்டு மாதகாலப்பகுதியை உள்ளடக்கியதாக (வாடகை வாராந்த அடிப்படையில் செலுத்துமிடத்து 8 வாரகால அறிவித்தல்) கொடுக்கப்பட வேண்டும். பிரிவு 21 அறிவித்தல் வாடகை ஒப்பந்தம் நடைமுறையில் உள்ள காலப்பகுதியில் செலுத்துமிடத்து இரண்டு மாத கால அளவு கொடுக்கப்பட வேண்டும். சட்ட அறிவித்தல் ஒரு குறிப்பிட்ட திகதியில் முடிவடைய வேண்டும் என்ற அவசியம் இல்லை. ஆனாலும் சட்ட அறிவித்தலை வாடகை ஒப்பந்தம் முடிவடைந்தபின் கொடுப்பதாயின் முழுதாக இரண்டு மாதம் கொடுக்க வேண்டும், மேலும் சட்ட அறிவித்தல் வாடகை ஒப்பந்தம் ஆரம்பித்த திகதிக்கு முதல் நாள் முடிவடைய வேண்டும்.

**ஆக்கம் : சட்டத்தரணி திரு. ஜெயராஜன் விஸ்வலிங்கம்**
**- LLB(Hons). MA, PGA**

அடுத்த இதழில் தொடரும்

*Disclaimer: No responsibility for any loss or consequential loss occasioned to any person as a result of this documentation can be accepted by Jeyarajan Visvalingam. The information should not be interpreted as being advice on specific issue. For your specific dispute or legal issue consult a qualified solicitor who is specializing in Residential Landlord and Tenant Law.*

TRT தமிழ் ஒலி
உலக தமிழர்களை ஒன்றிணைக்கும் வானொலி
www.tamilolli.com
செயற்கைக்கோள் ஒலிபரப்பு,
EUTELSAT HOT BIRD 13°
Frequency N° 12245 H (Horizontal)

ஐரோப்பாவின் முதல் 24 மணிநேர தமிழ் வானொலி
ரிஆர்ரி தமிழ் ஒலி

தேசம் கடந்தாலும் வீசும் காற்றாக உங்கள் வாசல் தேடிவரும் வானொலி
ரிஆர்ரி தமிழ் ஒலி

FACE

உங்கள் TRT தமிழ் ஒலியில் வணக்கம் தமிழ்ஒலி காலைப் பூந்தென்றல் வானொலிக் குறுக்கெழுத்துப்-போட்டி இசையும் கதையும் வியாழன் ஞாயிற்றுக்கிழமைகளில் அரசியல் சமூகமேடை (துல்லியமான பக்கசார்பற்ற அரசியல் ஆய்வு) வானிலை அரங்கம் பாடுவோர் பாடலாம் உதவுவோமா? தாயக உறவுகளைக் கைவிடமாட்டோம் சமூகப்பணி நிகழ்ச்சி பாட்டும் பதமும் சமைப்போம் ருசிப்போம் இராக்கோழி இன்னும் பல நிகழ்ச்சிகளை நீங்கள் கேட்டு மகிழலாம் .




**11+ Preparation**
*Intensive coaching for 11+ Entrance Examination*
*100% Success guaranteed, Proven Success in the past.*
*Free initial assessment!*

**Full-time Private Education**
*for Sixth form & adult Students*
- Mathematics
- Further mathematics
- ICT
- Economics
- Chemistry
- Physics
- Biology

*Value added, at least by one grade!*
*Focused on UCAS/University offers!*
CRB checked, Well qualified teachers
www.harrowtutorialcollege.co.uk

**HARROW TUTORIAL COLLEGE**
www.harrowtutorialcollege.co.uk
Tel: 020 8423 6227 ♦ Mob: 079 5731 7668
308 Eastcote Lane, South Harrow, HA2 9AH

**GCE AS & A2**
- Mathematics
- Further mathematics
- ICT
- Chemistry
- Physics
- Biology
- Economics

*Full-Time Intensive Course for gap-year and re-sit students*
*Weekend & Evening tuition classes for Full-time school students*

**GCSE**
- Mathematics
- Science
- English
- ICT

*Above subjects for* **KS1, KS2 & KS3**

**Intensive course (1 Yr) for gap year or resit students**
- Private exam entries for GCSE and Advanced Level
- Go through many past exam - style questions
- Cover the whole syllabus on time

CRB checked, Well qualified teachers
www.harrowtutorialcollege.co.uk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலையின் முதிர்ச்சி பெற்ற பாதை

பங்குனி 4, 2013 இதழின் தொடர்ச்சி . . .

தனது தேசிய அபிலாசைகளை அடைவதற்கு தன்னைத்தானே ஆளுகின்ற உரிமையைப் பெறுதல். இவ்வாறு சுயநிர்ணய உரிமையைப் பெற்றதன் பிற்பாடுதான் இறைமை என்கின்ற கோட்பாடு பற்றிப் பேச முடியும். ஆகவே சுயநிர்ணய உரிமையை பெறாமல் அல்லது அடையாமல் ஒரு தேசிய இனம் இறைமை பற்றி பேச முடியாது.

ஆகவே சுயநிர்ணய உரிமையைப் பெறல், இறைமையைப் பெறல் என்பவற்றிற்காக போராட்டங்களை நடாத்திக் கொண்டிருக்கும் சமூகங்கள் தமது இலக்கினை அடைவதற்கு தன்னிச்சையான சுதந்திரப் பிரகடணம், இடம்பெயர்ந்த அரசு உருவாக்கம். போன்ற அரசியல் சித்தாந்தங்களை அறிமுகப்படுத்தி அவற்றினூடே தமது போராட்ட இலக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் இடம்பெயர்ந்த அரசுகளிலிருந்து மாறுபட்டு தாயகத்திற்கு வெளியே புலம்பெயர்ந்து உலகெங்கும் சிதறிவாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களின் சுதந்திர விடுதலைப் போராட்டம் நாடுகள் கடந்து அமைக்கவிருக்கும் மக்களவைகளும், அவற்றினூடாக உருவாக்கமுனையும் நாடுகடந்த தமிழீழ அரசம் அதன் வரலாற்றுத் தேவை, வரலாற்றுப் பரிமான வளர்ச்சி அதன் சாகத பாதகத் தன்மைகள் பற்றி தொடர்ந்தும் வரும்.

இலங்கைத் தீவில் இன முரண்பாட்டுக்கான ஆரம்பப் படிநிலை எதுவென நோக்குகின்ற போது அது பிரித்தானிய காலணித்துவ காலாத்தின் இறுதிப்பகுதியில் ஆரம்பித்தது எனக் கொள்ளலாம். பௌத்த மத மறுமலர்ச்சியின் தந்தை எனச் சிங்கள பௌத்தர்களால் வர்ணிக்கப்படும் அநாகரிக தர்மபாலாவின் தலைமையில் திரண்ட பௌத்த பிக்குகளுக்கு 1953ல் டி.சி.விஜயவர்த்னாவால் இனவாதத்தைப் பரப்புகின்ற வகையில் எழுதி வெளியிடப்பட்ட நூலான “விகாரையினுள் ஓர் புரட்சி” (ஹிட்லரின் மெயின் காம்ப் என்ற நூலைப் போன்றது.) என்ற நூல் மேலும் இனவாதத்தைத் தூண்ட இதனை அடிப்படையாக் கொண்டு கீழ் மட்ட சிங்கள சமூகத்தவர்கள் மத்தியில் பௌத்த மதத்தை தமிழர் எதிர்ப்புணர்வோடு கலந்து பரப்பியதன் வெளிப்பாடுதான் இலங்கை சுதந்திரம் பெற்ற கையோடு சிங்கள அரசியல்த் தலைவர்களின் தமிழர் விரோதப் போக்கும் இனப்படுகொலைகளுக்கும் காரணமாயிற்று.

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கையின் அரசியல்த் தலைவர்களில் தமிழர்கள் முக்கியத்துவம் பெற்றிருந்தாலும் கூட இவ் தமிழ் அரசியத் தலைவர்களை அரசியல் வாதிகள் என்று குறிப்பிட்டுச் சொல்லமுடியாது ஏனெனில் இவர்கள் யாவரும் மிகச்சிறந்த சட்ட வல்லுனர்களாகவும், முழுநேர வழக்கறிஞர்களாகவே இருந்தனர். அதே நோரம் பகுதிநேர அரசியல் நடத்துபவர்களாகச் செயற்பட்டு தமது சமூக கௌரவத்தை தக்கவைக்க முனைந்தார்களேயன்றி அரசியல் வாதியாக ஒருபோதும் அவர்கள் செயற்பட்டது கிடையாது.

அரசியல்வாதி என்பவன் தான் பிரதிநிதித்துவப் படுத்துகின்ற சமூகத்தினதோ, அல்லது இனத்தினதோ எதிரகால வாழ்வு இருப்பு என்பவற்றில் நீண்ட தூரப் பார்வை உடையவர்காளாக தமது கொள்கையை வகுத்துச் செயற்படுவர். ஆனால் தமிழ் அரசியல்த் தலைவர்களிடம் தமிழினத்தின் எதிர்கால வாழ்வு பற்றிய நீண்ட தூரப் பார்வை இருந்திருக்கவில்லை. இதனால்த் தான் மிகக்குறைந்த கல்வியறிவுடைய சிங்கள அரசியல் வாதியான டி.எஸ். சேனநாயக்காவிடமும், அதன்பின் வந்த சிங்களத் தலைவர்களிடமும் இவ் சட்ட வல்லுனர்களான பகுதிநேர தமிழ் அரசியல் வாதிகள் தோற்றுப் போயினர்.


சிங்களத் தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் செய்துகொண்ட ஒப்பந்தங்களும், அவர்கள் கொடுத்த வாக்குறுதிகளும், பௌத்த பிக்குகளின் சிம்ம கர்ச்சனையினால் காற்றில் பறந்து போயின. இவ்வாறு தமிழ் சட்ட வல்லுனர்களின் நீண்டகாலத் தொடர் தோல்வியும், காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இனக்கலவரம், சிங்கள மொழிச் சட்டம், தரப்படுத்தல் ஆகியனவற்றின் தாக்கம் இலங்கையின் வடகிழக்குத் தமிழர் மத்தியில் இவர்கள் மீது ஏற்பட்டுக் கொண்டிருந்த அதிருப்தியுமே தமிழர் சுய நிர்ணய உரிமை, தாயகம், தேசியம் பற்றி பேச வேண்டிய வரலாற்று நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திற்று என்றே சொல்லாம்.

இவ் இனமுரண்பாட்டின் இறுக்க நிலையானது சிங்கள அரசியல் வாதிகளுடன் ஒப்பந்தங்களைச் செய்தோ அல்லது பேசியோ எந்தப் பலனையும் பெறமுடியாது என்ற அவர்கள் உணர்ந்த காலகட்டத்தில் தமிழ்த் தேசிய வாதம் வடகிழக்கில் எழுச்சி பெற அதன் அடுத்த நிலையான பிரிந்து வாழ்தல் என்ற நிலைக்கு இட்டுச் சென்றது. இதன் வெளிப்பாடுதான் தமிழ்ச் சமூகத்தினதும், அக்காலகட்ட தமிழ்த் தேசிய வாதத்தின் எழுச்சியும் தமிழர் வட்டுக் கோட்டை மாநாட்டை நடத்த உந்திற்று. இம் மாநாட்டின் இறுதியில் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம், தமிழர் தேசிய இனம், தமிழர் சுய நிர்ணய உரிமை என்பவற்றை அடிநாதமாகக் கொண்ட பூரண சுதந்திரமும், தன்னாட்சியும் கொண்ட சோசலிச தமிழீழத்தை அமைப்போம்.

**ஆக்கம்: தி.வன்னியன்**

அடுத்த இதழில் தொடரும்


Krish Ratna & Co Solicitors - Southall
020 8574 6303




- Residential & Commercial Conveyancing,
- Immigration Matters AND
- Family Matters

61A, King Street, SOUTHALL, UB2 4DQ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் கேள்வியும் உங்கள்பதிலும்

1] அர்த்தமுள்ள இந்துமதம் எழுதியவர்?
a) பாரதிதாஸன் b) கண்ணதாஸன்
c) வாலி

2] வழக்கு விசாரணையின் போது_____ முடிவை கூறுவார்?
a) சட்டத்தரணி b) எதிரி
c) நீதிபதி

3] மழை வருவதற்கு முன்_____ காணப்படும்?
a) வெய்யில் b) இருட்டு
c) இடிமின்னல்

4] பசி இல்லாமல் வாழ்வதற்கு_____ அவசியமாகும்?
a) வேலை b) வீடு
c) சொந்தம்

5] தமிழ் மக்கள் எங்கு வாழ்ந்தாலும்_____ எண்ணத்துடன் வாழ்கிறார்கள்?
a) கலை b) பராமரிப்பு
c) விடுதலை

6] தெய்வத்தின் சன்னிதானத்தில்_____ சமன்?
a) பிள்ளைகள் b) பெரியோர்கள்
c) எல்லோரும்

7] ஈழத்தமிழர்கள் வெளிநாடுகளில்_____ வாழ்கிறார்கள்?
a) பரவலாக b) மிகக்குறைவாக
c) அரிதாக

8] இந்திரா காந்தி_____ ஆண்டில் சுட்டுக்கொல்லப்பட்டார்?
a) 1983 b) 1985
c) 1984

9] G.G.பொன்னம்பலம் இலங்கைப் பாராளுமன்றத்தில்_____ எனும் பதவி வகித்தார்?
a) ஆலோசகர் b) மந்திரி
c) எதிர்க்கட்சித்தலைவர்

10] நியூட்ரன் சட்டவிதி_____ தேற்றங்களைக் கொண்டுள்ளது?
a) 1 b) 2 c) 3

11] விண்ணுக்கு முதன்முதல் சென்றவர்?
a) அமெரிக்கர் b) இங்கிலாந்தவர்
c) இந்தியர்

12] கால் மார்ஸ் எனும் தத்துவஞானி_____ நாட்டைச் சேர்ந்தவர்?
a) அமெரிக்கா b) ரைசியா
c) ஜேர்மனி

13] ஈழத்தமிழர் புலம் பெயர்ந்து அகதிகளாக_____ இல் ஐரோப்பாவில் குடியேறினர்?
a) 1974 b) 1980
c) 1977

14] மாணிக்கவாசகர்_____ பாடியுள்ளார்?
a) தேவாரம் b)திருவாசகம்
c) திருப்பல்லாண்டு

15] பல்லாண்டு நலமுடன் வாழ்வதிற்கு_____ வேண்டும்?
a) பணம் b) கல்வி
c) தேகாரோக்கியம்

16] மாண்புமிகு மந்திரி அரசியல்_____?
a) கற்பித்தார் b) பாடினார்
c) பேசினார்

17] ஈழத்தமிழர்கள் வாழும் நிலப்பகுதியை_____ என அழைப்பார்கள்?
a) நாடு b) தீவு
c) நகரம்

18] திருக்குறள்_____ அதிகாரங்களைக்கொண்டது?
a) 100 b) 130
c) 133

19] சிவபெருமானுக்கு_____ எனும் மறு பெயர் உண்டு?
a) கிருஸ்னன் b) வைரவர்
c) தில்லைக்கூத்தன்

20] சிற்பி என்பவன் ஓர்_____?
a) தச்சன் b) தட்டான்
c) ஓவியன்

Score : 20

## பதிலை நீங்கள் எழுதவும்

Score : 20

1] யாழ்ப்பாணத்தில் உள்ள முருகன் ஆலயம் 3 எழுதுக?
______________________________

2] மாமனிதர் குமார் பொன்னம்பலம் நினைவு நாள் எது?
______________________________

3] தாயகத்தில் குதிரைமுகம் நீங்கிய கோயில் எது?
______________________________

4] தமிழீழ விடுதலைப்புலிகளின் முதலாவது தாக்குதல் படையணி எது?
______________________________

5] ஒரே இடத்தில் 7 நீரூற்றுகள் அமைந்த நகரத்தின் பெயர் என்ன?
______________________________

6] தமிழீழ விடுதலைப் புலிகளினால் ஓயாத அலைகள் 2 இன் மூலம் மீட்கப்பட்ட பகுதி எது?
______________________________

7] அமரர் அமிர்தலிங்கம் எந்தத் தொகுதியில் வெற்றி பெற்று எதிர்க்கட்சி தலைவரானார்?
______________________________

8] விடுதலைப் புலிகளின் முதல் கட்டன் தர மாவீரர் யார்?
______________________________

9] யாழ்மாவட்டத்தில் உள்ள 5 தீவுகள் எழுதுக?
______________________________

10] கிளிநொச்சியில் அமைந்திருந்த சிறுவர் பூங்கா எந்த மாவீரர் நினைவாக அமைக்கப்பெற்றது?
______________________________

இதில் 7,8 எனும் பக்கங்களில் இருக்கும் கேள்விகளுக்கு பதிலை எமது முகவரிக்கு அனுப்பி பங்கு பெறுபவர்கள் பெறும் புள்ளிகள் வருடாந்த பரிசுப்போட்டிக்குள் உள்வாங்கப்படும்.

## பங்குனி 4, 2013 7ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

| | |
|---|---|
| 1] c | 11] c |
| 2] a | 12] a |
| 3] b | 13] a |
| 4] a | 14] a |
| 5] c | 15] c |
| 6] c | 16] a |
| 7] c | 17] a |
| 8] a | 18] c |
| 9] a | 19] a |
| 10] b | 20] a |

1] 1943ஆம் ஆண்டு
2] வல்லாரை, பொன்னாங்காணி, பசளி
3] விளைநிலம், செங்கல், மண்ணின் தன்மை சிறப்பு
4] வானில் பறக்கும் வான்ஊர்தி
5] செல்லக்கிளி 6] 1983 ஆடி மாதம்
7] 1988 8] தரப்படுத்தலைக் கண்டித்து உருவாக்கப்பட்டது
9] சித்திரை 1ஆம் திகதி. (தமிழக்கு)
10] தினேஷ்

## பங்குனி 4, 2013 2ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1] மகாகவி பாரதியார்
2] இலட்சுமி அம்மையார்
3] சின்னச்சாமி சுப்பிரமணியி ஐயர்
4] ஐந்து
5] 16 வயதில் 6] 1896
7] அரசாங்க பாரதியார் பல்கலைக்கழகம்
8] 1982

முழுப்பெயர் : ______________________________
தொலைத் தொடர்பு இல : ______________________________
குறியீடு பதிவு (post code) : ______________________________
*Please return to our address*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மொழிபெயர்ப்பு பரிசுப்போட்டி

## தமிழ் வாக்கியத்தை வாசித்து ஆங்கில மொழிக்கு மாற்றுக - Score : 18

1] இலங்கையில் நல்லூர் முருகன் ஆலயம் மிகவும் பிரசித்தி பெற்றது

2] ஐக்கிய நாடுகள் சபையின் அடுத்த கூட்டத்தொடர் புரட்டாதியில் ஆரம்பமாகும்

3] புதிய பாப்பரசருக்கான தெரிவு வத்திக்கானில் இடம்பெறும்

4] இலங்கை நாலு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும்

5] உலகில் உள்ள சமுத்திரங்களில் பசுபிக் சமுத்திரம் மிகப் பெரிதாகும்

6] அணிசேரா மகாநாடு இலங்கையில் 1976ஆம ஆண்டு நடாத்தப்பட்டது

7] 1971ஆம் ஆண்டில் பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் அறிமுகப்படுத்தப்பட்டது

8] பேராசிரியர் சு.வித்தியானந்தன் நீண்ட காலமாக யாழ்பல்கலைக்கழகத்தில் துணைவேந்தராக கடமையாற்றினார்

9] சேர்.பொன்.இராமநாதனால் பரமேஸ்வராக்கல்லூரியும், இராமநாதன் கல்லூரியும் யாழ்ப்பாணத்தில் உருவாக்கப்பட்டது

10] தமிழீழ விடுதலைக் கூட்டணி என்ற அமைப்பிற்கு ம.சிவசிதம்பரம் தலைவராகப் பணியாற்றினார்

## ஆங்கில மொழியில் அமைந்திருக்கும் வசனங்களை தமிழில் மொழிபெயர்க்கவேண்டும் - Score : 18

1] It is very hard to identify the way of approach

2] You can gather enough support from Tamil community centre in Hayes

3] Our president wanted to fly to Japan and Korea

4] The management team may interrupt by the mediation

5] In addition to snow in England the storm could bring 50mph winds

6] It remains unclear weather all of those adoptions will have to be cancelled

7] We are going out to fight until the end

8] The general staff would like to establish effective cooperation

9] Nearly after four years we have come to know how Balachandran died.

10] There are vacancies in the marketing department on Insein team

இதில் 7,8 எனும் பக்கங்களில் இருக்கும் கேள்விகளுக்கு பதிலை எமது முகவரிக்கு அனுப்பி பங்கு பெறுபவர்கள் பெறும் புள்ளிகள் வருடாந்த பரிசுப்போட்டிக்குள் உள்வாங்கப்படும்.

## பங்குனி 4, 2013 8ஆம் பக்கத்தில் வந்த கேள்விகளுக்கான விடைகள்

1] It is noticed that the cost of living in Ceylon has been increased
2] Canada is one of the wealthy countries in the world
3] When the students learning the aims are not only for the examinations
4] If you have the proper way of insurance policy you can claim
5] The weather will be better this week than the last week
6] I am six inches taller than my brother
7] My sister is thicker appearance than me
8] I have to do my work as much as I can
9] I am expecting your reply as early as possible
10] The umbrella could be used not to make the wet on the head in our home land

1] நாளாந்த வாழ்வியல் வேலைகளை நடைமுறை தொழிற்பாடு என்பார்கள்
2] எங்களுடைய திருமண வருடாந்த திருநாளை என்னுடைய குடும்பத்தினர் இந்தியாவில் கொண்டாடுகிறார்கள்
3] தேவை ஏற்படும் போது இது மாற்றப்படவேண்டும்
4] நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தினரால் தமிழீழக் கொள்கை கைவிடப்படவில்லை
5] கெயிஸ் வாசிகசாலையில் இருக்கும் புத்தகங்களில் பல கலாச்சார நம்பிக்கை பற்றியதாகும்
6] அரசாங்க வாழ்வாதார வருமானத்தில் வாழும் மக்கள் ஆட்சி மையத்தில் வரிவிலக்கிற்கு விண்ணப்பிக்கலாம்.
7] தற்போதிய வேலை பழைய வேலையை விட சற்றுக் கடினமானதாகும்
8] சென்ற புதன்கிழமை தமிழ் மக்கள் சம்மந்தப்பட்ட கலந்துரையாடல் நடைபெற்றது
9] இலங்கை மீது அமெரிக்கா குறித்த ஒழுங்காற்றலை வற்புறுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது
10] இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்

## மகாத்மா காந்தியைப் பற்றிய கேள்விகள்

Score : 24

1] காந்தி எப்போது பிறந்தார்?

2] அவரின் தாயாரின் பெயர் என்ன?

3] அவரின் தந்தையாரின் பெயர் என்ன?

4] அவரது மனைவியின் பெயர் என்ன?

5] இந்தியக் கொடி எப்போது லாகூரில் பறக்கவிடப்பட்டது?

6] இவர் எந்த நகரத்தில் பிறந்தார்?

7] அவர் எக்கல்லூரியில், எத்தனையாம் ஆண்டு படித்து சட்ட உரைஞர் ஆனார்?

8] அவர் வேலை செய்த நிறுவனத்தின் பெயர் என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் - எங்கள் விடுதலைக்கு உதவுங்கள்

**???????ஜன், புதிய மகசின் சிறைச்சாலை, கொழும்பு**

அன்புடன் ராஜன் அண்ணா அவர்கள்,
மேற்படி நான் 14/01/2000 அன்று கைது செய்யப்பட்டேன். இன்றைய தினம் என் சிறையிருப்பின் 13 ஆண்டுகள் பூர்த்தியாகின்றது. எனது வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றில் முடிவின்றிய நிலையில் இடம்பெற்று வருகின்றது. எனது சிறையிருப்புக் காலத்திலேயே என் அம்மா, அப்பா இறந்துவிட்டனர், ஆதலால் எனது வழக்கு விடயங்களைக் கையாள எவருமே இல்லாத நிலையில் மனித உரிமைகள் அமைப்பினரே வழக்கை நடத்தி வருகின்றனர், அவர்களது அக்கறையீனம் வழக்கின் இழுபறி நிலைக்கு காரணமாகும். இந்நிலையிலிருந்து விடுபெற உங்களின் சட்ட உதவியை எதிர்பார்கின்றேன். எனது தொலைபேசி இலக்கம் 07??????0??. உண்மையில் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒருவருக்கு ஆயுள் தண்டனை வெள்ளிக்கிழமை 22 பெப்ரவரி 2013 GMT 02:16.47am வழங்கப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒருவருக்கு கண்டி உயர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்துள்ளது. மத்திய மாகாணத்தில் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடல் மற்றும் அதி சக்தி வாய்ந்த வெடிபொருட்களை வைத்திருத்தல் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. கண்டி உயர் நீதிமன்ற நீதவான் மனிலால் வைத்திய-ரத்னவினால் இந்தத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. மாத்தளையைச் சேர்ந்த 29 வயதான ராமநாதன் நவனீதன் என்பவருக்கே இவ்வாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. 2008ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் குறித்த நபரை பொலிஸார் கைது செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 12 வருடங்களாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ???????மாவும் (புதிய மகசீன் சிறை) அவரது மனைவியும் (வெலிக்கடை பெண்கள் பிரிவு) சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்து வருகின்றனர். இவ்விருவரும் 09/02/2000ஆம் ஆண்டு திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா அவர்கள் மீதான குண்டுத்தாக்குதலின் சந்தேக நபர்களாக கைது செய்யப்பட்டனர். 4ஆம், 6ஆம் மாடிகள் என இலங்கையின் கொடும் சித்திரவதை கூடங்கள் யாவிலும் வைத்து மிகவும் சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். பெற்றோர்களை பயங்கரவாத தடுப்புச் சட்டம் சிறையில் அடைக்க மற்றைய 2 பிள்ளைகளும் உறவினர்கள் யாரும் பொறுப்பேற்காத நிலமையில் மட்டக்களப்பு இராமகிருஸ்ணமிஷனில் வளர்ந்து வருகின்றனர். தாயும் தந்தையும் 2000ஆம் ஆண்டு கைது செய்யப்பட்ட நேரம் பெண்பிள்ளைக்கு 7 வயது ஆண்பிள்ளைக்கு 5 வயது. தற்போது அந்தப்பிள்ளைகள் உயர்தரத்தில் கற்றுக் கொண்டிருக்கின்றனர். குழந்தைப்பருவத்தில் கிடைக்க வேண்டிய தாயன்பும் தந்தையின் அன்பும் பெறாத துரதிஸ்டக் குழந்தைகளாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இவருக்கான ஒரு சட்டத்தரணியை ஏற்படுத்தித் தாருங்கள். ??????வேல் நிமலன் கைது 2013/03/07 ஆம் திகதி வழக்கு இலக்கம் HC28?? பாணந்துறை உயர் நீதிமன்றம். இவருக்கான அடுத்த திகதி 0?/0?/2013. அடுத்தது புதுக்கடை உயர் நீதிமன்றம் HC5?0?, இவருக்கு உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப் பட்டிருக்கின்ற நான்கு வழக்குகளும் மிகவும் பாரதுரமானவை இதைவிட இன்னும் இவருக்கு எதிராக பல வழக்குகளை தாக்கல் செய்ய இருக்கின்றனர். இதைவிட பரிதாபமான விடயம் இவருடைய மனைவியும் வெளிக்கடை பெண்கள் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார். பெயர் தமரா இருஷானி 6 வயதிலும் 2 வயதிலும் இரண்டு பிள்ளைகள் இருக்கின்றார்கள். விடுதலைக்கான போராட்டத்தில் கொழும்பிலிருந்து கொண்டு தீவரமாக செயல்பட்ட ஒரு குடும்பம்தான் இவர்கள். இவர்களுக்கு புலம் பெயர்ந்து வாழ்கின்ற சமூகம் தான் சட்ட உதவி செய்து தரவேண்டும்.

இவர்களுக்கான தொடர்பு இலக்கம்: 07784?? ??424 தகப்பன் த???வே???.

நன்றி.

இப்படிக்கு - செல்வா
தமிழ் அரசியல் கைதி

## Funds Requested



இலங்கையின் மன்னார் மாவட்டத்தில் உள்ள அடம்பன் கிராமத்திற்கு அண்மித்த குக்கிராமமான காயாங்குளி என்னும் இடத்தில் அமைக்கப்படும் பாடசாலையின் கட்டிடத்தொகுதியை கீழ் உள்ள படத்தில் பார்க்கலாம்.

இக்கட்டிடத்தை பாவனைக்கு கொண்டு வருவதற்கு கூரை வேலை செய்யவேண்டும். இதற்கு இலங்கை பணத்தில் 500,000 ரூபாய் (£2,500) தேவைப்படுகின்றது. இக்கிராமத்தில் இரு பகுதிகளாக மொத்தம் 290 குடும்பங்கள் குடியமர்தப்பட்டுள்ளார்கள் (1100 பேர்கள்). தற்பொழுது மலசல கூடமும் அமைக்கப்பட்டு ஏனைய சிறுசிறு வேலை-லகளும் நடைபெறுகின்றன. இப்பாடசாலையில் கல்வி பயிலுவதற்காக 45 சிறாகள் காத்திருக்- கிறார்கள். இப்பாடசாலையை இயங்க வைப்பதற்கு உங்கள் ஆதரவை வேண்டுகிறோம்.

*(குறிப்பு TRT ஊடகததினர் சமூகப்பணி ஊடாக தமது பங்களிப்பை வழங்கி இந்நிலைக்கு உதவியுள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது)*

மேலதிக தொடர்புகட்கு - Dr. Ravee : 0044 (0)790 843 7921


**கருணை நிதிக்கான வேண்டுகோள் - கருணையுள்ளத்துடன்**

தாயகத்தில் உடன் பிறப்புக்களுக்கு ஆதரவு வழங்குமாறு அன்புடன் வேண்டி நிற்கின்றோம்.



**INSEIN RELAX FUND**
(0044)7908437921 அல்லது
(004420)8561 6324
Unit 6 610 Uxbridge Road,
Hayes Middlesex. UB4 0RY

**நற்செய்தி!..**

தாயக உறவுகளுக்கு நிதி ரீதியாக உதவ விரும்புவர்கள் எந்தவித சேவைக்கட்டணமும் இல்லாமல் உங்களெண்ணங்களை எம்முடன் தொடர்பு கொண்டு பூர்த்தி செய்லாம்.




**INSEIN (LONDON)**
Unit 6, 610, Uxbridge Road,
Hayes, Middlesex, UB4 0RY.
(020)8561 6324 / 07908437921
Mon:Sat-10.30am to 12.30pm


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆன்மீகம் - ஆலயம்

பங்குனி 4, 2013 இதழின் தொடர்ச்சி . . .
"சோதியே சுடரே! —விளக்கே", "ஒளியார் விளக்கே!" மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்," , "தீப மங்கள ஜோதிளு நமோ நம" , "பிரமமாய் நின்ற சோதிப்பிழம்பு" என்ற திருவாக்குகளின்ால் அறிக.

உலகில் காணப்படும் பொருள்களில் கல்லில் நெருப்பு அதிகமாகத் தங்கியிருப்பது கண்கூடு. ஒரு கல்லை மற்றொரு கல்லால் தட்டினால் நெருப்பு உடனே வெளிப்படுகின்றது. சிவ வேள்வி வளர்த்து அச் சிவ வேள்வியில் எழும் சிவவொளியை நிறைகுடமாகிய கும்பத்தில் சேமித்து அக்கும்ப நீரால் நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரகத்தை அபிஷேகம் புரிந்து பெரியோர்கள் கல் விக்கிரகமாகிய கடவுளை நிறுவினார்கள். எனவே சோதிடமயமான ஒளியின் ஆற்றல் அக் கற்சிலையில் அமைந்திருக்கின்றது. இனி திருவீதியில் எழுந்தருளி வரும் உற்சவ மூர்த்தி செம்பினால் அமைந்துள்ளது. அதன் காரணம் கூறுவதும் ஊருக்கு வெளியே அமைந்துள்ள மன் ஆற்றலை ஊருக்குள்ளே பாய்ச்சும் கம்பி செம்பினால் அமைந்திருப்பதைக் காண்க. செப்புக் கம்பிக்குப் பாய்ச்சும் ஆற்றல் உளது. ஆகவே மூலஸ்தானத்தில் சேமித்துள்ள தெய்வ மின்சார ஆற்றலை ஆன்மாக்களின் உய்வு கருதி திருவீதியில் பாய்ச்சுகின்ற உற்சவ மூர்த்தியைச் செம்பினால் அமைத்த நமது முன்னோர்களின் மதி நலத்தை உன்னும் பொழுது உள்ளம் உருகுகின்றது. இன்று கண்கூடாக விளங்கும் இந்த சாதனங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னரேயே பல ஆண்டுகளுக்கு முன் தாமிர விக்கிரகத்தைச் செய்து அதன் மூலம் ஆன்மாக்களுக்கு நமது முன்னோர்கள் நன்மை புரிந்தார்கள்.

"மேலும் இறைவன் எங்கும் நிறைந்திருக்கின்றான். ஆதலால் இறைவனை ஆலயத்தில் சென்று தான் வணங்கவேண்டுமா? இருந்த இடத்தில் இருந்தே வணங்கினால் போதாதா? ஏன்று கூறுவாருமுளர். இறைவன் எங்கும் நிறைந்திருப்பினும் ஆலயத்திலுள்ள திருவுருவத்தில் விளங்கித் தோன்றுகின்றனன். பசுவின் உடம்பு முழுவதும் பால் நிறைந்திருக்கின்றது. பாலைப் பெற முயல்கின்ற ஒருவன் அதன் கொம்பையோ, காதுகளையோ, வாலையோ வருடினால் பால் கிடைக்குமா? என்ன கிடைக்கும் என்பதைக் கூறவேண்டாமே எனவே பால் பெற விரும்புவோன் பசுவின் மடியை வருடிப் பால் பெறுவது போல் இறைவன் அருளைப் பெற விரும்புவோன் ஆலயத்தில் சென்று இறைவனை திருமுன் நின்று வழிபட்டுத் திருவருளைப் பெறுதல் வேண்டும்.

இனி கம்பிகளில் மறைந்து நிற்கும் மின்சார ஆற்றல் மின்சார விளக்கின் மூலம் வெளிப்படுவது பேரல் எங்கும் மறைந்து நிறைந்திருக்கின்ற இறைவன் திருவருளைத் திருக்கோயிலின் திருவுருவங்கள் மூலம் பெறுவது எளிய முறை என உணர்க.
எனவே நமது முன்னோர்கள் கல்லையும், செம்பையும் கடவுள் எனக் கருதி மூடநம்பிக்கையினால் வழிபட்டார்கள் எனக் கருதுவது பேதமையாகும். கல்லிலும், செம்பிலும் அமைந்துள்ள அருளாற்றலையே அவர்கள் கடவுளென்று கருதி வழிபட்டார்கள். நம்மையும் வழிபடுமாறு வழிகாட்டினார்கள்.

**ஆக்கம் : சந்துரு ஐயா**
அடுத்த இதழில் தொடரும்

# ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயம்

ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தில் 03/03/13 அன்று (ஞாயிற்றுக்கிழமை) நடைபெற்ற நிர்வாகசபை உறுப்பினர்களுக்கான தேர்தலில் (SKTAT Executive Community Eection 2013 - 2015) புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டார்கள்.

சென்ற ஆண்டு 17 ஆவணி 2012ஆம் ஆண்டு இடம் பெற்ற ஓர் கவலைக்குரிய சம்பவத்தினால் அச்சந்தர்ப்பத்தில் உள்ள நிர்வாக சபை (Executive Committee) கலைக்கப்பட வேண்டும் என அவ்வாலயத்தின் அறங்காவட்சபையினரும் வேறுசில அங்கத்தவர்களும் வலியுறுத்தினார்கள். அதற்கு அந்த நிர்வாகசபை மறுப்புத் தெரிவித்தது. அதைத் தொடர்ந்து பலவிதமான வற்புறுத்தல்களின் மத்தியில் அக்கோவிலின் மூல யாப்பிற்கமைய (Constitution) அப்போது கடமையில் இருந்த நிர்வாகம் 03/03/13 இல் இவ்வாறான தேர்தல் நடைபெறும் என அறிவித்தது. அதைத்தொடர்ந்து திரு கருணைலிங்கம் தலமையில் ஓர் குழுவும், திரு இராமச்சந்திரன் தலமையில் ஓர் குழுவும் தேர்தல் களத்தில் தங்களை வேட்பாளர்களை நிறுத்திக் கொண்டார்கள். மிகுந்த சிரமத்திற்கு மத்தியிலும் பரவலான விமர்சனத்திற்கும் உட்பட்ட நிலையிலும் இத்தேர்தல் கோவிலுக்கான தொண்டர்களையும், அங்கத்தவர்களையும் ஓர் நிலைப்படுத்தி திரு கணேசராசா அவர்களின் தலமையில் தேர்தல் கண்காணிப்புக்குழு அமைக்கப்பட்டு தேர்தல் நடைபெற்றது. இதில் திரு. இராமச்சந்திரன் தலமையிலான குழுவினர் வெற்றி பெற்றார்கள். வெற்றி பெற்ற நிர்வாக சபை உறப்பினர்களும் அவர்களுக்கான பதவியும் பின்வருமாறுள்ளன.

**தலைவர்/ Chairman**
Mr. Sellappah Ramachandran
திரு. செல்லப்பா இராமச்சந்திரன் (ராம் அண்ணா)

**உபதலைவர்/ Vice chairman**
Dr (Mrs) Suganthamala Radhakrishnan known as Dr. Radha
டாக்டர்.சு.மாலா இராதாகிருஷ்ணன் (Dr.ராதா)

**செயலாளர்/ Secretary**
Mr.Kumarasamy Baskeran
திரு. குமாரசாமி பாஸ்கரன்

**இணைச் செயலாளர்/ Joint Secretary**
Mr.Rajaratnam Paramakumar (Param)
திரு. இராஜரட்ணம் பரமகுமார் (பரம்)

**பொருளாளர்/ Treasurer**
Mr.Kandiah Sarvananthan
திரு. கந்தையா சர்வானந்தன்

**உதவிப்பொருளாளர்/ Assistant Treasurer**
Mr.Sabapathy Ragunathan (Ragu)
திரு. சபாபதி இரகுநாதன் (ரகு)

**உத்தியோகப் பற்றற்ற நிர்வாக உத்தியோகத்தர்/ Unofficial Committee Member**
Mr. Perampalam Kanapathippillai
திரு. பேரம்பலம் கணபதிப்பிள்ளை

According to the President Mr. Ramachandran's speech, we can gather that the elected executive committee will take part the important concept of SKTAT maintenance and for the people those who live in Ceylon are to be helped.

ஆலய வளர்ச்சிக்கும், தாயக உறவுகளுக்கும் உதவி செய்திட நாங்கள் முன்வருவோம் என தனது உரையில் திரு இராமச்சந்திரன் கூறினார்.

**ஆக்கம் : ஆசிரியர் P.S.R**

உங்கள் எடையைக் குறைக்க / அதிகரிக்க கட்டுப்படுத்த!!! . . .

உங்கள் விருப்பமான உணவு எதையும் தவிர்க்காமல் எடையைக் கட்டுப்படுத்தி உடல் ஆரோக்கியத்தை உணருங்கள்.




விபரங்களுக்கு - சந்திரகுமார்
079 0323 4730



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஓலைகள்
# TAMIL PAGES

*Is celebrating* **20** *years of service*

தமிழர்களுக்கோர் தரமான இலவச சமூக வர்த்தக தகவல் ஏடு

எமது **20** வது புதிய பதிப்பில் உங்கள் விளம்பரங்கள் விவரங்கள் இடம் பெற உடனே தொடர்பு கொள்ளுங்கள்

**Act now !**
**Before its too late**

**You can advertise from £25 onwards**

தொடர்புகளுக்கு

www.tamilpages.com

0771 800 3838 | 0798 642 9848 | 07703 190 768

editor@tamilpages.com

52 Kingsley Road, Wimbledon
London SW19 8HF

## PGA SOLICITORS LLP 020 8573 6673

1048 UXBRIDGE ROAD,
HAYES, MIDDLESEX,
UB4 0RJ

**CONTACT**
Mr. Jeyarajan Visvalngam MA, LL.B (Hons,) Solicitor
Mrs. Malarvili Umasuthan, Solicitor
M : 079 4369 8335 / F : 020 8573 9773

**PRACTICE AREAS**

- # Civil litigation
- # Commercial Litigation/Disputes
- # Conveyancing- Commercial and Residential property
- # Landlord and Tenant: Residential and Commercial Property
- # Court of Protection and Lasting Powers of Attorney Matters
- # Liquor Licencing/Premises Licences
- # Neighbour/Boundary Disputes
- # Planning law
- # Family law
- # Immigration law
- # Wills and Probate



Authorised and Regulated by the Solicitors Regulation Authority. SRA ID 461800.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org